<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 251/2019 | சாட்சியம் | : | **WW2** |
| **Name** | : | சசிகுமார் | | | |
| **Date** | : | **06.11.2024** | | | |
| **Time** | : | **11.32 a.m to 12.29 p.m** | | | |

<u>தொ.த.சா.**2.**திரு.சசிகுமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பொதுவாக எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஏழு Cell க்கு ஒரு Value Stream Leader என்றால் தெரியாது. நான் இருப்பது Precision Forging Plant. Precision Forging Plant க்கு ஒரு Value Stream Leader இருப்பார் என்றால் தெரியாது. நான் ஷிப்ட் மாறி மாறி வேலை பார்ப்பேன் என்றால் ஆமாம். ஒவ்வொரு ஷிப்ட்டுக்கும் ஒவ்வொரு டீம் லீடர் இருப்பார் என்றால் கூடுதலாக கூட இருப்பார்கள். நான் வேலை பார்த்த ஷிப்டில் நான் மட்டும் தான் டீம் லீடராக இருந்தேனா அல்லது வேறு யாராவது கூட இருந்தார்களா என்றால் என்னுடன் சேர்த்து வேறு ஐந்து டீம் லீடர்களும் இருக்கிறார்கள் அவர்கள் மாறி மாறி என்னுடன் வேலை பார்ப்பார்கள். Precision Forging Plant இல் ஒரு பெரிய ஆட்டோமேட்டிக் மிஷின் உள்ளது என்றால் ஆமாம். அது அல்லாமல் மூன்று மிஷின்கள் உள்ளன. இந்த நாலு மிஷின்களில் ஆப்ரேட்டர்கள் வேலை செய்வார்கள் என்றால் ஆமாம். அவர்களுடன் ஒரு டீம் லீடர் இருப்பார் என்றால் ஆமாம். சூப்பர்வைசரும் இருப்பார் என்றால் சூப்பர்வைசர் இங்கும் இருப்பார்

அலுவலகத்திலும் சென்று சூப்பர்வைஸ் செய்வார். இயந்திரங்கள் இயக்கப்படும் இடத்தில் தான் டீம் லீடர் இருக்க வேண்டும் என்றால் சூப்பர்வைசர் உத்தரவு இடுவது போன்று இயந்திரங்கள் இருக்கும் இடத்தில் இருப்போம் அல்லது வேறு பணி ஏதாவது கொடுத்தால் அதையும் செய்வோம். சூப்பர்வைசரின் மேலதிகாரி ப்ரொடக்ஷன் மேனேஜர் ஆவார். புரொடக்ஷன் மேனேஜருக்கு மேலாக படிப்படியாக எம்.டி வரை அதிகாரிகள் உள்ளனர் என்றால் ஆமாம். எங்கள் பிளான்ட்டில் Bell, Tulip, AAR, தயாரிக்கிறோம். உற்பத்தி தொடங்குவதற்கு முன்னர் தினமும் சூப்பர்வைசர் டீம் லீடரிடம் இயந்திரத்தின் செயல்திறன் மற்றும் ஸ்பெசிபிகேஷன்ஸ் சம்பந்தமாக கேட்டு தெரிந்து கொள்வாரா என்றால் டீம் லீடரிடம் மட்டும் கேட்க வேண்டியது இல்லை இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கும் ஆபரேட்டரிடமும் கேட்பார் அங்கு அந்த சமயத்தில் யார் வேலை செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களிடம் கேட்பார் டீம் லீடர் அங்கு இருந்தால் டீம் லீடரிடமும் கேட்பார். Production Log Book ஒவ்வொரு ஷிப்ட்க்கும் இருக்கும் என்றால் ஆமாம். அதனை சிஸ்டத்தில் மெயின்டைன் செய்வார்கள். என்னிடம் காட்டப்படும் படிவத்தில் தான் ப்ரொடக்ஷன் லாக் புக் பிரிண்ட் அவுட் இருக்குமா என்றால் தெரியாது. நான் லாக் புக்கில் கையெழுத்து போடுவேனா என்றால் ஆமாம். ஆனால் தினமும் போட மாட்டோம் சூப்பர்வைசர் என்றை தினம் கொண்டு வந்து கையெழுத்து போட சொல்கிறாரோ அன்றைய தினம் கையெழுத்து போடுவோம். சூப்பர்வைசர் தினமும் லாக் புக்கில் கையெழுத்து போடுவாரா என்றால் போடமாட்டார். FFPO cum Frequency Inspection Check Sheet ல் நான் கையெழுத்து போடுவேனா என்றால் கையெழுத்து போடுவேன் ஆபரேட்டராக வேலை பார்த்தேன் என்றால் ஆப்பரேட்டர் என்ற இடத்தில் கையெழுத்து போடுவேன். மேற்படி படிவத்தில் டீம் லீடர் என்ற இடத்தில் நான் கையெழுத்து போடுவேனா என்றால் போடுவேன். என்னிடம்

காட்டப்படும் மூன்று படிவங்களிலும் உள்ள கையெழுத்து என்னுடையது போன்று தெரியவில்லை. அது நி.சா.ஆ.2 வரிசை ( ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

குறிப்பு

இதன் அசல் நிர்வாக தரப்பில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என உத்தரவு இடப்படுகிறது.

நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நி.சா.ஆ.2 வரிசையில் டீம் லீடர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்தும் நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்தும் ஒன்று போல் உள்ளது என்றால் இல்லை. நி.சா.ஆ.2 என்னை டீம் லீடராக நியமித்ததில் இருந்து இன்றைய தேதிவரையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் இல்லை. மேற்படி ஆவணம் 2016, 2017 ஆண்டுகளுக்கு பின்னர் சிஸ்டத்திலும் அதற்கு முன்னர் மேனுவல் ஆகவும் பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்படி ஆவணத்தில் நான் ஒரு நாள் கூட ஆபரேட்டர் என்ற காலத்தில் கையெழுத்து போடவில்லை என்றாலும் டீம் லீடர் என்ற காலத்தில் தான் கையெழுத்து போட்டு உள்ளேன் என்றாலும் இல்லை. Supply Chain, Maintenance, Tool Room, Lean Manufacture, பிரிவு உள்ளன என்றால் ஆமாம். மேற்படி பிரிவுகளில் என்னை போன்ற டீம் லீடர்கள் தான் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பார்கள் என்றால் இல்லை. நான் ஷிப்ட் முடிந்து போகும் பொழுது அடுத்து வரும் ஷிப்டில் உள்ள டீம் லீடருக்கு பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமா என்றால் மீட்டிங் பாய்ன்டில் தான் சொல்வோம். ஆப்பரேட்டர்கள் அவர்களின் வேலை நேரமான 8 மணி நேரமும் இயந்திரத்தில்

வேலை செய்ய வேண்டும் என்றாலும் ஆனால் டீம் லீடர்களுக்கு அது போன்று 8 மணி நேரமும் இயந்திரத்தில் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. இயந்திரங்களில் சிறு கோளாறு ஏற்படும் பட்சத்தில் அதனை நாங்கள் சரி செய்ய வேண்டும் என்றால் ஆமாம். நான் உள்பட மற்ற ஊழியர்கள் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் டீம் லீடர் என்ற வரையறையில் தான் வேலை பார்த்து வந்தோம் என்றாலும் தொழிலாளர் என்ற வரையறைக்குள் நாங்கள் வேலை பார்க்கவில்லை என்றாலும் அதன் காரணமாக இந்த தொழிற்தாவா நிலைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் இன்றைய தேதி வரையில் டீம் லீடர் அலவென்ஸ் வாங்கி வருகிறேன் என்றால் ஆமாம். நான் இந்த வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்ற காரணத்திற்காக நிர்வாகம் எனக்கு வழங்கிய டீம் லீடர் அளவென்ஸை ரத்து செய்யவில்லை என்றால் ஆமாம். டிசம்பர் 2022 இல் நிர்வாகம் ஒவ்வொரு வருடமும் சம்பளம் எந்த வகைகளின் கீழ் வழங்கப்படும் என தெரிவித்து ஒரு அறிக்கை கொடுத்தார்கள் என்றால் நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் அது ஜெராக்ஸ் ஆக இருக்கும் காரணத்தினால் சரியாக தெரியவில்லை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.11.2024